# Kalaimagal

# கலைமகள்

மலர் - 94 இதழ் - 5 மே - 2025 விலை - ₹ 50
Volume - 94 Issue - 5 May - 2025 Price - ₹ 50



சிறுகதை

# பரிசு

— சாந்தா



"ஏலே... சம்முவம், நாளக்கி கிரிக்கட் போட்டிக்கு பந்து கொண்டு போனும்லாடே. காசு சுத்தமா இல்ல. கேட்டா எங்கப்பன் அடிச்சே கொன்னுருவான்."

"முருகா... இங்க மட்டும் என்ன வாழுதாம்? எங்கப்பன்டேயும் காசு கிடையாது. பந்து திருநவேலிலதான் கிடைக்கும். பஸ் ஸ்டாண்ட் போய் பாப்போம்டே, யாராச்சும் திருநவேலி போறாளானு. போட்டில ஜெயிச்சு வார பரிசுத் தொகையில பந்துக்கான காச குடுத்துருவோம்."

இருவரும் திருநெல்வேலி மாவட்டத்து ஆழ்வார்குறிச்சி கிராமத்து பள்ளி மாணவர்கள். ஆழ்வார்குறிச்சி கிராமம் தென்காசியில் இருந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலையில் குற்றாலத்திற்கும்,

பாபநாசத்திற்கும் இடையே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமையப் பெற்ற எழில்மிகு கிராமம். விவசாயமே பிரதானம். ஆழ்வார்குறிச்சிக்கு வடக்கு எல்லையாக வரட்டையாறும், தெற்கு எல்லையாக கடனா நதியும் அமைந்துள்ளன. ஆழ்வார்குறிச்சிக்கு, தென்காசியிலிருந்து வருவோர் வரட்டையாறு பாலத்தையும், அம்பாசமுத்திரத்தில் இருந்து வருவோர் கடனா நதி பாலத்தையும் கடந்து, பச்சை வயல்வெளிகளூடே வகிடெடுத்தது போல வளைந்து நெளியும், ஒற்றைத் தார்ச் சாலை மீது பயணித்து வர வேண்டும். ஊருக்குள் தெப்பக் குளம், மேலக் குளம், கீழக் குளம் என்று மூன்று அழகிய நீர் நிலைகள் உண்டு.

பேருந்து நிலையத்தை அடைந்தனர் முருகனும், சண்முகமும்.

தூரத்தில் நீலச் சட்டை அணிந்து கொண்டு, மெதுவாக அருணாச்சலம் பேருந்து நிலையத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். கையில் கண்ணு மேஸ்திரியார் ஜவுளிக் கடை மஞ்சள் பை சுருண்டிருந்தது.

இரண்டு மாதங்களில் அருணாச்சலத்துக்கு எழுபத்தேழு வயது பூர்த்தியாகிறது. வீட்டில் அவரும், அவருடைய மனைவி பிச்சி மட்டுமே. பிச்சி அவரை விட ஐந்து வயது குறைந்தவர். குழந்தைகள் இல்லை. ஆழ்வார்குறிச்சி கிராமத்தில், அருணாசலத்தின் பூர்வீக வீட்டில், இருவரும் வசித்து வந்தனர். தலை முறை, தலை முறையாய் அருணாசலத்தின் முன்னோர்கள் எட்டு மரக்கால் வரப்பாட்டில் செய்து வந்த நெல் விவசாயத்தை, அருணாசலமும், பிச்சியும் தொடர்ந்து செய்து வந்தார்கள். அதில் வரும் வரும்படியில் அவர்களின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

அருணாசலத்தைப் பார்த்த முருகன், "சம்முவம், அருணாசலம் தாத்தா வாராவோ. சட்ட போட்டிருக்காவோ. திருநவேலியா இருக்குமாடே."

"இருக்கலாம். அவா வரட்டும். கேப்போம்."

அதற்குள் அருணாசலத்தை வழி மறித்து, பேருந்து நிலையம் அருகே வசித்து வந்த அருணாசலம் வயதொத்த சுத்தமல்லியா பேசத் துவங்கினார்.

"முருகா, சுத்தமல்லியா ஆச்சிக்கு வேற வேல இல்ல. தாத்தா சட்ட போட்டு வாரத பாத்ததும், அசலூர் போறத மோப்பம் பிடிச்சுட்டாவ. எங்க போறாவோ, எதுக்குப் போறாவோன்னு தெரியாட்டா ஆச்சிக்கு உறக்கம் வராதுல்லா. நம்ம அவசரம் புரியாம, அவுக வேற. பயோனியர் இப்போ வந்துருவான். அப்புறம் ரெண்டு மணி கழிச்சுதான் அடுத்த பஸ்."

பயோனியர் என சண்முகம் குறிப்பிட்டது செங்கோட்டையில் இருந்து ஆழ்வார்குறிச்சி வழியாக திருநெல்வேலி செல்லும் பேருந்தை. பயோனியர் பேருந்தில் ஏறி இறங்க ஒரே வழிதான். பேருந்தின் நடுவே அமைந்திருக்கும். பேருந்தில் நால்வர் அமரும் இருக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக வலது புறத்தில் வரிசையாக இருக்கும். நடந்து போக இடம் விட்டு, இடது பக்கத்தில், நீட்ட வாக்கில் ஒரு இருக்கை உண்டு. அதற்கு சங்கப் பலகை என்ற செல்லப் பெயரும் உண்டு.

ஆழ்வார்குறிச்சியிலிருந்து திருநெல்வேலி ஐம்பத்தைந்து கிலோமீட்டர் தூரம். பயோனியர் பேருந்து ஆழ்வார்குறிச்சியிலிருந்து கிளம்பி பதிமூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள அம்பாசமுத்திரம் அடைந்ததும், பேருந்தை நிறுத்தி, ஓட்டுனரும்,



நடத்துனரும் பேருந்து நிலைய ஆனந்த பவன் ஓட்டலுக்குள் நுழைந்து விடுவார்கள். பதினைந்து நிமிடங்கள் கழித்து, பேருந்தைக் கிளப்பி நாற்பது கிலோமீட்டர் வேகத்தில், இருபது கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சேரன்மகாதேவி சென்றடைந்ததும் மறுபடி பேருந்தை நிறுத்தி, ஓட்டுனரும், நடத்துனரும் பேருந்து நிலைய, உடுப்பி போத்தி ஓட்டலுக்குள் நுழைந்து விடுவார்கள். வெயிலின் தாக்கம் முழுமையாக பேருந்திற்குள் இறங்கும். பயணிகள் அவர்கள் மனதிற்குள் ஓட்டுனரையும், நடத்துனரையும் திட்டித் தீர்ப்பார்கள். "ஹோட்டல்காரன் வடயும், காப்பித்தண்ணியும் இலவசமாத் தாரான்ல, அதான் இளிச்சிட்டுப் போறானுவ" என்று சத்தமாகப்

புலம்பியவர்களும் உண்டு. பதினைந்து நிமிடங்கள் கழித்து மீண்டும் கிளம்பி, வழியில் வரும் எல்லா ஊர்களிலும் நின்று, திருநெல்வேலி பேருந்து நிலையத்தைச் சென்றடையும்.

ஒரு வழியாக , அருணாசலம், சுத்தமல்லியாவைக் கடந்து பேருந்து நிலையத்தை வந்தடைந்தார்.

அப்போது அந்த வழியாகச் சென்ற தன் தம்பி மகன் துரையைப் பார்த்து "துர, நான் திருநவேலி வர போறேன்டே. மேல வய வாமட கொஞ்சம் பாத்துக்கோ."

"சரி பெரியப்பா" என்றவாறு தோளில் மண் வேட்டியோடு தன் நடையைத் தொடர்ந்தார் துரை.

இதை பின்னாலிருந்து கேட்ட முருகனுக்கும், சண்முகத்துக்கும் சந்தோசம் பிடிபடவில்லை.

"தாத்தோவ்" முருகன் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார் அருணாசலம்.



"என்னால முருவா."

"வித்தூரமா."

"திருநவேலி போறேன்டே."

"தாத்தோவ், ஒரு விண்ணப்பம்."

"பீடிக பலமா இருக்கேடே, என்னனு சொல்லுடே."

"நாளக்கி அகஸ்தியர்பட்டில கிரிக்கட் போட்டி இருக்கு தாத்தா. அதுக்கு புதுப் பந்து கொண்டு போணும். திருநவேலிலதான் கிடைக்கும்.வாங்கியாந்திருவீகளா?"

சற்று யோசித்த அருணாச்சலம், "பந்து எவ்வளுவுடே."

"பாஞ்சு ரூவாதான் தாத்தா, போட்டில ஜெயிச்சு வார பரிசுப் பணத்துல கொடுத்துருவோம்."

"எங்கடே கிடைக்கும்?"

"ஜங்ஷன் மேம்பாலத்துக்கடில, சந்திர விலாஸ் ஹோட்டலுக்கு எதுத்தாப்புல இருக்கிற தெய்வு விளையாட்டுச் சாமான் கடைல கிடைக்கும் தாத்தா."

"சரிடே வாங்கியாறேன். ராவைக்கு வந்திருவன். வீட்டுக்கு வந்து வாங்கிக்கோங்க."

"ஜெயிச்சுருவீகளா?"

"என்ன அப்படிக் கேட்டுட்டீக? கண்டிப்பா ஜெயிச்சிருவோம்."

"அது என்னடே விளையாட்டு. நீங்க எல்லாம் களத்து மேட்டுல விளையாடுறத பாத்திருக்கன். நாங்க விளையாடின குச்சிக் கம்ப, வெள்ளைக்காரன் காப்பியடிச்சு மாத்தன மாறில்லா இருக்கு."

தூரத்தில் பேருந்து வந்து வந்து கொண்டிருந்தது. அதை பார்த்த முருகன்,

"தாத்தோவ், பயோனியர் வாரான்."

"சரிடே" என்றவாறு, சாலையின் எதிர்ப்புறம் சென்று, பேருந்து நின்றதும், அதில் ஏறினார்.

பேருந்து புறப்பட்டதும், "சம்முவா ஒரு வழியா பந்துக்கு ஏற்பாடு பண்ணியாச்சு. பேட்ட ரீஹாண்டில் பண்ணுறது மட்டுந்தான் பாக்கி. நடராசன் அண்ணன் கடல கிழங்கு மாவும், நாடாவும் வாங்கிருவோமாடே" என்றவாறு இருவரும் எதிர்ப்புறம் இருக்கும் நடராசன் கடை நோக்கி நடந்தனர்.

ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி பள்ளியில் வருடத்துக்கு ஒருமுறை பழைய விளையாட்டுப் பொருள்களை ஏலம் போட்டு விற்பார்கள். போன முறை கைப்பிடி உடைந்த கிரிக்கெட் மட்டை ஒன்றை நண்பர்கள் எல்லாரும் காசு போட்டு, ஏலத்தில் எடுத்திருந்தார்கள். அதைச் சரி செய்து நாளை போட்டியில் விளையாடுவதற்கு எடுத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். கிழங்கு மாவு வாங்கி, நன்கு காய்ச்சி, பசை இறுகுவற்குமுன், இதமான சூட்டில் நாடாவைப் பசையில் நன்கு தோய்த்து, கைப்பிடியைச் சரியாக பேட்டிற்குள் நிறுத்தி, இடுக்குகளில் பசையை தாராளமாக ஊற்றி, நாடாவால் கைப்பிடியையும், அடிப் பகுதியையும் இறுக்கமாகக் கட்டி, வெயிலில் காய வைத்து விட்டால், மட்டை நன்கு காய்ந்ததும், விளையாட்டிற்குத் தயாராகி விடும். சைக்கிள் கடை செண்பகம் அண்ணனிடம் மிதிவண்டிக் குழாய் ஒரு துண்டு வாங்கி, கைப்பிடியில் மாட்டி விட்டால், புது மட்டையாக ஆக உருமாறி விடும்.

இவர்களைக் கண்டதும் நடராசன், "முருவா,

அருணாசலம் தாத்தாவோட என்னடே குசுகுசுன்னு பேசிக்கிட்டிருந்தீக."

"அதான பாத்தேன். உங்க கண்ணுல படாம யாரும் ஏதாச்சும் பண்ண முடியமா. நாளக்கி அகஸ்தியர்பட்டில கிரிக்கட் போட்டி இருக்கு. அதுக்கு பந்து உங்க கடல கிடைக்காதுல்லா. திருநவேலிலதான கிடைக்கும். தாத்தா வாங்கியாரான்னுட்டவோ."

"துட்டு கொடுத்தீகளாடே."

"போட்டி ஜெயிச்சு வார பரிசுப் பணத்திலேர்..."

"கிழிஞ்சுது போ. சரி, இப்போ என்னடே வேணும்?"

"கொஞ்சம் கிழங்கு மாவு அண்ண."

"எப்போடே சினிமா போஸ்டர் ஓட்ட ஆரம்பிச்சீக."

"சும்மா இருங்கண்ண, நாள போட்டிக்கு பேட் ரெடி பண்ணத்தான் கேட்டேன். அதோட ஒரு ரோல் பாவாடை நாடவும் கொடுங்க."

"துட்டு."

"போட்டி ஜெயி..."



"ஏலே! எங்க அய்யா எனக்கு ஏற்கனவே காத்து குத்திட்டார்ல. துட்டு கொடுத்துட்டு வாங்கிட்டுப் போங்க."

"எங்கப்பா கணக்கில எழுதிக்கோங்க. நாளைக்கி ரூவா கொடுத்ததும் அடிச்சிடணும்."

"நான் அடிக்கிறது இருக்கட்டும். உங்கப்பன் உன்ன அடிக்கப் போறான்" என்றவாறே, மாவை எடை போட்டும், ஒரு ரோல் நாடாவும் கொடுத்தார்.

வீடு செல்லும் வழியில் இருக்கும் செண்பகம் அண்ணன் கடைக்குச் சென்றார்கள். செண்பகம் மிதிவண்டியைப் பழுது பார்ப்பதில் மும்மரமாக மூழ்கியிருந்தார்.

"அண்ணே ஒரு அடிக்கு சைக்கிள் டியூப் துண்டு ஒன்னு தாங்கண்ண. பேட்டுக்கு வேணும்."

"மேச கீழ ஒரு துண்டு கிடக்கும். எடுத்துக்கோ."

மிதிவண்டிக் குழாய் துண்டோடு வீடு வந்தடைந்தனர். மட்டையைச் சரி செய்து வெயிலில் காய வைத்தனர்.

"முருவா, பிறவு வாரேண்டே" என்றவாறு சண்முகம் வீடு சென்றான்.

சாயங்காலம் பேசியவாறே, பேருந்து நிலையம் அருகே இருவரும் செல்லும் போது, நடராசன் இவர்களைக் கூப்பிட்டு, "முருவா, அருணாசலம் இப்போ போன கண்ணன் மோகன்ல வந்துட்டாவடே .வீட்டுக்கு போய்க்கிட்டு இருக்காவோ."

"ராவைக்குத்தானே வாரதா சொன்னாவோ" என்றவாறு, இருவரும் அருணாசலம் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தனர். தூரத்தில் அருணாசலம் வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்தனர்.

"யோவ், டாக்டர் என்னய்யா சொன்னாரு?"

"அவர் என்ன சொல்லுவாரு? வழக்கம்போல மாத்திர எழுதிக் கொடுத்தாரு."

"வாங்கிட்டீரா?"

"பையக் கொடும்யா."

அருணாசலம் தயக்கத்தோடு பையை பிச்சியிடம் கொடுத்தார்.

"இது என்னய்யா? பந்தாய்யா? மாத்திரைய காணும்."

"அந்தப் புள்ளகளுக்கு வாங்கியாந்தீரோ?"

"நம்ம பொழைப்புக்கே வழியக் காணும். இதில ஊருக்கு உதவுறீரோ. நீரு பெரிய வள்ளலு."

"யோவ், உமக்கு கோட்டித்தான் பிடிச்சிருக்கு.ராவ பூரா தோண்ட போச்ச. இருமி இருமி நீர்தான் கஷ்டப்படுதீரு. அப்புறம் மாத்திரை வாங்காம ஏன்யா வந்தீரு. காசப் பூரா பந்து வாங்கி காலி பண்ணிட்டீரோ?"

"பதில் சொல்லாம கமுக்கமா இருந்திரும்."

"யோவ் நீர் போய்ச் சேந்துட்டா, நான் என்னய்யா பண்ணுவன். எனக்கு அந்தப் பிள்ளைகள பிடிக்கதா என்ன? நம்ம விரலுக்குத் தக்கத்தானே வீக்கம் இருக்கணும். சைலப்பரே... நீதான் இவர எப்படியாச்சும் கெதியா வக்கணும்."

"சரி. மதியம் சாப்பிட்டிருக்க மாட்டீரு. பழயது வச்சிருக்கன். ஈருள்ளி ஆஞ்சு தாரேன். முதல்ல சாப்பிடும்."

பிச்சி கண்களைத் துடைத்தவாறே, சிறு வெங்காயங்கள் அறுக்கத் துவங்க,

கதவிற்கு வெளியே நின்று கொண்டிருந்த இருவரின் கண்களிலும் கண்ணீர் சொரியத் துவங்கியது. ●